யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.

# J/ Hartley College, Point Pedro.

விடுமுறைக்கால செயலட்டை – 2 –2020–தரம் 11

## Holiday Worksheet - 2 – 2020 –Grade 11

| தமிழ் மொழியும் இலக்கியமும் | 22 | T | I,II | மூன்று மணித்தியாலங்கள் 3 hours |
|---|---|---|---|---|

சுட்டெண் **Index No**

**தமிழ் மொழியும் இலக்கியமும்**

**பகுதி – I**

**பொருத்தமான விடையைத் தெரிக**

01. எனக்குச் சாட்சிக்கு கூட ஒருவருமில்லை இங்கே சாட்சி என்பதன் பொருள்
    1. வாதம் 2. நீதி 3. சான்றாதாரம் 4. சந்தர்ப்பம்

02. பின்வரும் பெயர்களில் அர்த்தத்தில் மாறுபட்ட பெயர்
    1. தங்கம்மா 2. செல்லம்மா 3. பொன்னம்மா 4. கனகம்மா

03. “வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்” இங்கு வழுதுணங்காய் எனப்படுவது
    1. வாழைக்காய் 2. மாங்காய் 3. கத்தரிக்காய் 4. பாகற்காய்

04. பொருத்தமற்ற சோடிச் சொல்லாக அமைவது
    1. குக்கல் - நாய் 2. கூர்மம் - ஆமை 3. தகர் - ஆடு 4. அரிமா – மான்

05. “பிரசண்ட மாருதம் என்பதற்குரிய எதிர்க்கருத்து
    1. மந்த மாருதம் 2. பிரசமாதான மாருதம்
    3. அப்பிரசண்ட மாருதம் 4. சண்டவாருதம்

06. பொழிப்புரை என்பதற்குரிய எதிர்க்கருத்து
    1. பதவுரை 2. விரிவுரை 3. சுருக்கவுரை 4. களிப்புரை

07. தூர்த்தன் என்பதன் எதிர்பாற் சொல்
    1. தூர்த்தை 2. தூர்த்தனி 3. தூர்த்தச்சி 4. தூர்த்தி

08. cliche (கிளிசே) என்ற கலைச் சொல்லின் பொருள்
    1. தெய்வழக்கு 2. அடையாளம் 3. உரிமம் 4. படிமம்

09. எந்த இடத்தில் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமோ இந்த அடத்தில் அவ்விதம் நடந்து கொள்ளும் நற்பண்பு கொண்டவன்
    1. சந்தர்ப்பவாதி 2. விவேகி 3. பச்சோந்தி 4. சகுனி

10. நரகத்தின் வாசலில் ஓடுகின்ற நதியாகக் கூறப்படுவது
    1. வானதி 2. வைதரணி 3. யமநதி 4. மகாநதி

11. கடும் வெயிற் காலத்தில் வெளிகளில் நீர் ஒடுவது போன்ற தோற்றத்தை மூதாதையர் அழைத்தது
    1. வெள்ளிடி 2. பேய்த்தேர் 3. நிணக்கூழ் 4. பார்வை மிருகம்

12. பத்திராதிபர் என்ற வட சொல்லின் தமிழ் வடிவம்
    1. சான்றாசிரியர் 2. கவனமுதல்வர் 3. இதழாசிரியர் 4. உரிமையாளர்

13. இருபாற் பொதுப் பெயராக அமைவது
    1. ஆசான் 2. முதலமைச்சர் 3. குரு 4. கவிஞன்

14. படம், பதாகை, துவசம் ஆகிய சொற்களால் குறிக்கப்படுவது
    1. கூந்தல்    2. மதி    3. பாம்பு    4. கொடி

15. காழி, காளி, காலி என்பனவற்றில் பொருளாக அமைவது
    1. உறுதி, அம்மன், பசு    2. பசு, அம்மன், உறுதி
    3. சீர்காழி, பசு, அம்மன்    4. உறுதி, அம்மன், சீர்காழி

16. மூத்தோரும் தவறலாம் என்ற கருத்தினை தரும் பழமொழி
    1. மாடு கிழமானாலும் பாலின் சுவை போகுமா?    2. மந்திரிக்கும் உண்டு மதிக்கேடு
    3. பொறிவென்றவனே அறிவின் குரு    4. நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு

17. மத்திகை (சாட்டை) என்பது
    1. தெலுங்கு மொழி    2. கன்னட மொழி    3. கிரேக்க மொழி    4. பாரசீக மொழி

18. அகராதி பேசுதல் என்ற மரபுத்தொடரின் பொருள்
    1. பொருள் கூறுதல்    2. உதாரணம் காட்டி பேசுதல்
    3. எல்லாம் அறிந்தது போல் பேசுதல்    4. ஆசையை உண்டாக்கி பேசுதல்

19. பிரவாக நிலை என்ற கருத்தினை விளக்கும் உவமைத் தொடர்
    1. வெள்ளிடை மலைபோல்    2. பாலும் தேனும் போல
    3. தேடிய பூண்டு பாலில் சிக்கயது போல    4. மடைதிறந்த வெள்ளம் போல

20. ‘‘நன்றாக யோசித்து’’ என்ற கருத்தினை தரும் இணைமொழி
    1. சீரும் சிறப்பும்    2. திட்டவட்டம்    3. ஆய்ந்து ஓய்ந்து    4. பேரும் புகழும்

21. ‘‘உமிழ் நீர்’’ என்பது எவ்வகையான தொகை
    1. உம்மைத் தொகை    2. உவமைத் தொகை    3. வினைத் தொகை    4. பண்புத் தொகை

22. வேற்று நிலை மெய்ம்மயக்கம், உடநிலை மெய்ம்மயக்கம் இரண்டும் இடம்பெற்ற சொல்
    1. பாக்கு மரம்    2. பார்தத்தான்    3. வாழ்ந்தான்    4. நடந்தான்

23. உகரம் இதழ் குவிந்து உச்சரிக்கப்படும் சொல்
    1. சங்கு    2. மார்பு    3. வரகு    4. புயல்

24. போலி எழுத்து இடம்பெறும் சொல்
    1. சாம்பர்    2. சாம்பார்    3. புதினம்    4. நட்சத்திரம்

25. ‘‘தல்’’ விகுதி பெற்ற தொழிற் பெயர் அமையும் சொல்
    1. காதல்    2. நுதல்    3. முதல்    4. போதல்

26. விளிவேற்றுமை ஏற்காதது
    1. தங்கை    2. மாணவர்கள்    3. நீங்கள்    4. தாய்

27. மருங்கொலிகள் இடம்பெறுவது
    1. பழமுதிர்ச்சோலை    2. தொழிலாளி    3. எழிலானவர்    4. புளியம்பழம்

28. உளப்பாட்டுத் தன்மை பன்மையாக அமைவது
    1. நம்மவீட்டுப்பிள்ளை    2. எங்கவீட்டுப்பிள்ளை
    3. உங்கவீட்டுப்பிள்ளை    4. என்வீட்டுப்பிள்ளை

29. பகுபத உறுப்புக்கள் ஆறும் இடம்பெற்ற சொல்
    1. பார்த்தனன்    2. ஓடுகின்றான்    3. பகைத்தான்    4. நடந்தனன்

30 கால் மாத்திரை பெறும் எழுத்து
    1. ஆய்தக்குறுக்கும்    2. குற்றியலுகரம்    3. ஐகாரக்குறுக்கும்    4. ஔகாரக்குறுக்கம்

31. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல் வரிசை
    1. கத்தரிக்கோல், நிட்சயம், புடலங்காய்
    2. கத்திரிக்கோல், நிச்சயம், புடலங்காய்
    3. கத்தரிக்கோல், நிட்சயம், புடோலங்காய்
    4. கத்தரிக்கோல், நிச்சயம், புடோலங்காய்

32. வழுவற்ற வாக்கியத்தை தெரிக
    1. கந்தன் மாட்டுக்கு புண்ணாக்கு வைத்தான்
    2. திருக்குறளை எழுதியது யார்?
    3. ஒவ்வொரு பூக்களும் பூத்தன.
    4. தொல்காப்பியம் பழமை வாய்ந்த நூல் ஆகும்.

33. அபூர்வா நோய்வாய்ப்பட்டமைக்கு காரணம்
    1. உடல் அக்கறையற்றபடியால்
    2. உடல் அக்கறையில்லை
    3. உடல் அக்கறையில்லாததால்
    4. உடல் அக்கறையின்மையாகும்

34. வைரமுத்துவின் கவிதை வரிகள் அனைத்தும்
    1. உணர்ச்சி மிக்கனவாய் இருந்தன.
    2. உணர்ச்சி மிக்கனவாய் இருந்தது.
    3. உணர்ச்சி மிக்கதாய் இருந்தன.
    4. உணர்ச்சி மிக்கதாய் இருந்தது.

35. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என வழங்கப்படும் காப்பியம்.
    1. சிலப்பதிகாரம் 2. சீவகசிந்தாமணி 3. மணிமேகலை 4. வளையாபதி

36. பொதியினைச் சுமக்கும் கிராமத்துப் பெண்கள் முந்தானைச் சேலையின் நுனிப்பகுதியை சுருட்டித் தலையில் வைத்தல்
    1. சும்மாடு கட்டுதல் 2. கூட்டாஞ்சேலை செருகுதல்
    3. முந்தானை முடிச்சிடல் 4. அனுக்கிரகம் செய்தல்

**பின்வரும் கவிதையைப்படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

இன்பனி நீங்கி இளவேனில் வந்துவிட்டால்
வெண்பனி போலவே வேம்பெங்கும் பூப்பூக்கும்
தந்தை வளர்த்த மரம் தாங்கிக் கிளைபரப்ப
விந்தைப்பறவை எல்லாம் வீட்டில் இளைப்பாறும்

ஒற்றைக்கால் பந்தர்போல் ஓங்கும் மரத்தின் கீழ்
சற்றே ஆயரோடு சாய்ந்திருந்த போதில் தான்
கள்ளமில்லாக் காக்கையின் காதல் கரை புரள
துள்ளி எழுந்தது என்னுள் தூதெண்ணம் தோன்றியது

37. இக்கவிதை எவ்வகை இலக்கியமாக அமைகிறது.
    1. பரணி 2. தூது 3. ஊஞ்சல் 4. கும்மி

38. வேப்பம் பூக்களுக்குக் கூறப்பட்ட உவமானமாக அமைவது
    1. இளவேனில் 2. வெண்பனி 3. விந்தைப்பறவை 4. இன்பனி

39. கவிதையில் இடம்பெறும் போலி
    1. காக்கை 2. விந்தை 3. ஒற்றை 4. பந்தர்

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழங்கு பெற வைத்தால் கட்டுக்கொப்பான பந்தியொன்று அமையம். அதற்கேற்ப பொருத்தமான வைப்பு முறையைத் தெரிக.
    அ. வீடு அலாதியான அனுபவங்களின் கூட்டுத்தொகுப்பு என்றால் மிகையில்லை
    ஆ. அவ்வாறு நின்று நிலைப்பதற்கு ஆளுமை மிகுந்த இயக்குநரான பாலுமகேந்திரா காரண கர்த்தாவாக அமைகின்றார்.
    இ. அதனாலே தான் ‘வீடு’ படம் பார்த்து இருபது வருடங்கள் கழித்தும் அதன் காட்சிகள் மனதிலே நின்று நிலைக்கின்றன.
    ஈ. ஒரு நல்லபடம் நமது ஆள்மனதில் ஒரு நினைவைப் போல் நம் வாழ்க்கையில் நடந்த சம்பவம் போல ஓர் அனுபவமாகத் தங்கி விடுகிறது.
    உ. அவரது திரைமொழி அற்புதமாக அமைந்துள்ளது.
    1. ஈ,ஆ,உ,அ,இ 2. ஈ,ஆ,உ,இ,அ 3. அ,இ,ஆ,உ,ஈ 4. இ,உ,ஆ,அ,ஈ

## பகுதி – II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

01. சுருக்கமான விடை தருக.

i. பின்வரும் தொடரை சந்தி பிரித்து எழுதுக?
 பொலிந்த செழுந்தாதிறைக்கும்

ii. மறை என்ற சொல் பெயராகவும் வினையாகவும் அமைய வாக்கியம் அமைக்குக.

iii. ஆற்றோரத்தில் ஒரு ஆலமரம் இவ்வாக்கியத்தின் பயனிலையைத் தருக?

iv. நடு, நாடு உகர வேறுபாட்டைத் தருக?

v. பின்வரும் வாக்கியங்களிற்கு பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டு வாக்கியத்தை மீண்டும் எழுதுக.
 நாயக்கர் காலத்தில் பள்ளு உலா கலம்பகம் போன்ற நூல்கள் தோன்றின.

vi. பொருளமைவுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தி எழுதுக.
 மாலையை / வீமனுடைய / குலத்தில் / அழிவில்லாத / அணிந்த / மணம் / நான் / உதித்தவள் / வீசும்

vii. பின்வருவனவற்றுள் வினையெச்சத் தொடர்களை இனங்காண்க
 சாலச்சிறந்தது, பாடி மகிழ்நதான், ஓடிவந்தான், ஆடிய மகன், ஓடுதல் நல்லது.

viii. ரவி திருந்தினான் என்ற தன்வினை வாக்கியத்தை பிறவினை வாக்கியமாக மாற்றுக.

ix. தற்காலத்தில் கருத்தா இன்றி செயப்பாட்டு வினை வழக்கில் உள்ளது. உதாரணம் ஒன்று தருக?

x. சில மாணவர்கள் கல்வியிலே திறமை காட்டினர். இதில் இடம் பெற்ற வழுவை நீக்கி மீண்டும் வாக்கியத்தை எழுதுக

(10 x 2 = 20 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு கட்டுரை வரைக.

i. இன்று உலகம் இக்கட்டான காலகட்டத்தில் உள்ளது. கொரோனா என்ற தொற்று நோயாலும் சனத்தொகைப் பெருக்கத்தின் விளைவால் வீதிகளில் நெருக்கடிகளாலும் மதவழிபாடுகளில் ஈடுபடுகையில் சனநெரிசலாலும் சமூக இடைவெளியைப் பேணுவது தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. இதற்கு தீர்வாக வீட்டில் இருந்தவாறு கல்வி, வேலை, மதவழிபாடு என எதிர்காலம் நகரப்போகின்றது. இதற்கு இலத்திரனியல் உலகமே சரியான தீர்வாக அமைகிறது. இக்கருத்தினை விளக்கும் விளக்கக் கட்டுரை.

ii. இலங்கைத் திருநாட்டில் கொரோனா வைரஸ் தாக்கத்தினால் பாடசாலை முதல் பல்கலைக்கழகங்கள் வரை பலமாதங்களாக மூடப்பட்டுள்ளன. இதனால் பாடசாலை மாணவர்கள் கல்வியைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர். இந்நிலையில் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீளும் அதேவேளை இழந்த கல்வியை ஈடு செய்வதற்கான உபாயங்கள் தாங்கிய மேடைப்பேச்சு

iii. நாட்டின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுவது விவசாய உற்பத்தியே எனக் கூறும் ஒருவருக்கும் இல்லை கைத்தொழில் உற்பத்தியே எனக்கூறும் ஒருவருக்குமிடையிலான உரையாடல்

iv. முயன்றால் முடியாதது எதுவமில்லை என்ற கருவைத் தாங்கிய சிறுகதை

(25 புள்ளிகள்)

03. பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

அழகிய பொருளால் என்றும் அடைவது ஆனந்தமே" என்று ஆங்கில கவிஞர் அருளிப் போந்தார். கண்ணினைக் கவரும் அழகையும், கருத்தினைக் கவரும் அறிவையும் தெய்வ நலன்களாகக் கருதி வழிப்பட்ட பெருமை பாரத நாட்டினர்க்கு உரியதாகும். அழகினைத் திருமகள் என்றும் அறிவினை கலைமகள் என்றும் கொண்டு பாரத முன்னோர் போற்றினார்கள். வெள்ளைக் கலையுடுத்து. வெள்ளைப் பணி பூண்டு, வெள்ளைக் கமலத்தே வீற்றிருக்கும் கலைமகளை பாரதியார் போற்றும் முறை சாலச் சிறந்ததாகும். இவ்வுலகில் வழங்கும் கலைகளை கவின் கலையென்றும் பகுத்துக் கூறுவதுண்டு. கண்ணையும், செவியையும் கவர்ந்து அவற்றின் வாயிலாக மனதிற்கு இன்பமூட்டும் கலைகள் கவின் கலைகள் ஆகும். மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் பலதிறப்பட்ட பொருள்களை ஆக்கிக் கொள்வதற்குச் சாதனமாகிய கலைகள் பயன் கலைகள் எனப்படும். இவ்விருவகைக் கலைகளின் வடிவமாக நாமகள் விளங்குகிறாள். என்னும் உண்மையைப் பாரதியார் நன்கு அருளிப்போந்தார். செஞ்சொற்கவி இயற்றும் கலைவாணர் கருத்திலும் உள்ளொளி வாய்ந்த உரவோர் மனத்திலும் உலகினர்க்கு ஒளிநெறி காட்டும் உயரிய மறையினும் கலைமகள் மகிழ்ந்துரைக்கின்றாள். இன்னும் இன்னிசை வீணையை மலர்க்கரத்திலேந்திய கலைமகள், மக்கள் பேசும் மழலை மொழியிலும், மாதர் இசைக்கும் மதுரப்பாட்டிலும் கீதம் பாடும் குயிலின் குரலிலும் சிறையாளும் மடக்கிளியின் செந்நாவிலும் அமர்ந்திருக்கின்றாள். அன்றியும், மாகூங்களை அழகு செய்யும் ஓவியங்களிலும், கோயில்களில் அமைந்த சீரிய சிற்பங்களிலும் கலைமகள் விளங்குகின்றாள். எனவே செவியினைக் கவரும் இயற்கவியும். இன்னிசையும், கண்களைக் கவரும் ஓவியமும், சிற்பமும் அறிவுத்தெய்வம் உறையும் இடங்களாகும்.

(10 புள்ளிகள்)

04. பின்வரும் பாடலைப்படித்து கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக

அருணன் உதித்தனன், அம்புஜம் விண்டது
அளிகளும் மொய்த்தன பாராய்!
அம்மாநீ எழுந்தோடி வாராய்!

பசியபுல் நுனியினில் பதித்த வெண்முத்தமோ
பனித்துளி தானோ? நீ பாராய்!
பைங்கிளி எழுந்தோடி வாராய்!

பொழுது விடிந்தது, பொற்கோழிகூவிற்று
பூஞ்செடி பொலிவதைப்பாராய்!
பொன்னே! நீ எழுந்தோடி வாராய்!

காகம் கரைந்தது காலையும் ஆயிற்று
கனியுதிர் காவினைப்பாராய்!
கண்ணே! நீ எழுந்தோடி வாராய்!

i. பொழுது விடிந்து விட்டதாகக் கவிஞர் காட்டும் மூன்று நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுக.
ii. இங்கு குழந்தை துயில் எழ தாயானவள் எவ்வாறு தூண்டுகின்றாள்?
iii. கனியுதிர்காவினைப்பாராய்'' என்பதன் பொருளை உமது சொந்த மொழிநடையில் எழுதுக.
iv. கவிஞர் இங்கு பனித்துளியின் அழகை வர்ணிக்கும் சிறப்பைக் குறிப்பிடுக.
v.அருணன் உதித்தனன், அம்புஜம் விண்டது -இந்நிகழ்வுகளுக்கிகடையேயான தொடர்பை விளக்குக.

(10 புள்ளிகள்)

05. உமது கிராமத்தில் மரநடுகைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. எனவே கிராம அபிவிருத்திச்சங்க செயலாளர் என்ற வகையில் மரநடுகைத்திட்டத்திற்கு வேண்டிய உதவிகளைக் கோரி பிரதேச செயலாளருக்கு கடிதம் வரைக.

அல்லது

நாட்டில் பெய்து வரும் மழையால் டெங்கு நோய் அபாயம் ஏற்பட்டுள்ளது.டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வை தாங்கி சுகாதாரப் பிரிவனரால் வெளியிடப்படும் துண்டுப்பிரசுரம்.

(15 புள்ளிகள்)